பக்கங்கள் – 12
விலை – ரூபா 50
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 306
வெள்ளிக்கிழமை
27 செப்ரெம்பர் 2024
புரட்டாதி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"தக்கன சேர்தலும்
தகாதன பிரிதலும்
தேர்தலில சாதாரணம்
கண்டியளோ"

7 தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவில்

# நாடாளுமன்றத் தேர்தலில் பொதுக்கட்டமைப்பு போட்டி?

இரண்டு நாள்களில் முடிவென்று பொதுச்சபை (சிவில்) அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 27

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு போட்டியிடுவது தொடர்பில் நேற்றையதினம் நீண்டநேரம் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

11



## தியாகதீபம் திலீபனுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி!

யாழ்ப்பாணம், செப். 27

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, உண்ணா நோன்பிருந்து உயிரிழந்த தியாகதீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் தமிழர் தாயகத்தில் நேற்று உணர்வுபூர்வமாக அஞ்சலிக்கப்பட்டது. நேற்றுக் காலை 7.15 மணியளவில் ஊரெழுவில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் பிறந்த இல்லத்தில்

11

## வடக்கில் மழை!

யாழ்ப்பாணம், செப். 27

வடக்கில் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதிவரை மழைக்குச் சாத்தியம் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப்

11

## முன்னைய முறைப்படி விசா நடைமுறைகள்!

நேற்று நள்ளிரவு முதல்

கொழும்பு, செப். 27

விசா நெருக்கடிகளைத் தீர்க்கும் விதமாக, முன்னைய முறைப்படி விசா வழங்கும் நடைமுறை நேற்று நள்ளிரவு 12 மணிமுதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

விசா வழங்கும் நடைமுறை தொடர்பான

11

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியிலிருந்து விலகல்

கொழும்பு, செப். 27

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சாலிய விக்கிரமசூரிய தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

அதன்படி, பெட்ரோலியம் கூட்டுத்தாபனம், சிலோன் பெட்ரோலியம் சேமிப்பு முனையங்கள் லிமிடெட் மற்றும் டிரின்கோ பெட்ரோலியம் டெர்மினல் ஆகிய

11

## போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளது



யாழ்ப்பாணம், செப். 27

நாட்டில் நுகர்வுக்குப் போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரிகள் ஜனாதிபதி அநுர குமாரவிடம் தெரிவித்துள்ளனர்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போதே, போதுமானளவு எரிபொருள் கையிருப்பில் உள்ள விடயம் அவருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மக்களுக்குத் தடையின்றி எரிபொருளை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் வினைத்திறனுடன் முன்னெடுப்பதன் அவசியத்தை வலியுறுத்திய

11

ரணிலை ஆதரித்த பெரமுனவினர்

## தினேஷ் தலைமையில் புதிய கூட்டணி!



கொழும்பு, செப். 27

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் பொதுத்தேர்தலை எதிர்கொள்வதற்குரிய

11

## ஐ.தே.க.வுடன் கூட்டணி சஜித் தரப்பு பரிசீலனை

கடும் நிபந்தனைகள் விதிக்கப்படும்

கொழும்பு, செப். 27

நாடாளுமன்றத் தேர்தலின்போது, ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி சாதகமான பரிசீலனைகளில் ஈடுபடத் தயாராகியுள்ளதாகத் தெரியவருகின்றது.

11

## பிணை நிபந்தனை மீறல்கள்: மருத்துவர் அர்ச்சுனா மறியலில்

யாழ்ப்பாணம், செப். 27

சாவகச்சேரி மருத்துவமனையின் முன்னாள் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதிவரை

11

## வயோதிபர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 27

தனிமையில் வசித்து வந்த வயோதிபர் ஒருவர், அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அல்வாய் கிழக்கு, அல்வாயைச்

11

## குடும்பத்தலைவர் சடலமாக மீட்பு!

வவுனியா, செப். 27

மன்னார் இலுப்பைக்கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பியாறு அந்தோனியார் ஆலய வளாகத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

11

## கல்லுண்டாய் குப்பைமேட்டில் தீ!

யாழ்ப்பாணம், செப். 27

யாழ்ப்பாணம் மாநகரசபையின் கல்லுண்டாய் திண்மக் கழிவகற்றல் பகுதியில் நேற்று இரவு தீ ஏற்பட்டுள்ளது.

11

## மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் ஜனாதிபதி அநுரவால் நடவடிக்கை!

கொழும்பு, செப். 27

மீனவர்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் எரிபொருள் மானியத்தை வழங்குமாறு ஜனாதிபதி திறைசேரிக்கு பணிப்புரை விடுத்துள்ளார். ஒருநாள் மற்றும் பலநாள் மீன்பிடி படகு உரிமையாளர்களிற்கு மாதாந்த அடிப்

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லுபடியற்ற வாக்குகள் இம்முறை மும்மடங்கு

## ஆராய்வதற்கு நடவடிக்கை



**கொழும்பு, செப். 27**
**2024 ஜனாதிபதித் தேர்தலில் அதிகளவான வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கான காரணத்தை ஆய்வினூடாகக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 452 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.
இந்த எண்ணிக்கை அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 0.85 சதவீதமாகப் பதிவாகியிருந்தது.
எனினும் கடந்த 21ஆம் திகதி நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 3 இலட்சத்து 300 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.
இது அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 2.24 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.
இதேவேளை இம்முறை தபால் மூலமாக வாக்களித்த அரச ஊழியர்களின் வாக்கு எண்ணிக்கையில் 16 ஆயிரத்து 508 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.
எனவே, இந்த முறை அதிகளவான வாக்குகள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணம் ஆய்வில் கண்டறியப்படவுள்ளது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)

## எதிரணிக்கு மக்கள் ஆணை பொதுத்தேர்தலில் கிடைக்காது

### தேசிய மக்கள் சக்தி நம்பிக்கை

கொழும்பு, செப். 27
பொதுத்தேர்தலில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கைப்பற்றுவதற்கு எதிரணிகள் வியூகம் வகுத்துவரும் நிலையில், அதற்குரிய ஆணையை மக்கள் வழங்கமாட்டார்கள் என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.
நாடாளுமன்றத்தின் அதிகாரத்தையும் தேசிய மக்கள் சக்திக்கே மக்கள் வழங்குவார்கள் என்று அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.
'ஜனாதிபதித் தேர்தலில் நாம் வென்றுவிட்டோம். தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தின் அதிகாரமும் தேவை. எனவே, எவ்வித ஐயமும் இன்றி அதற்குரிய ஆணையை மக்கள் எமக்கு வழங்குவார்கள் என்பது உறுதி. எதிரணிகள் எப்படித்தான் உளறினாலும் மக்கள் எமது பக்கமே நிற்கின்றனர் - என்றார். (ஓ-44)



## ஜனாதிபதித் தேர்தலில் யாரையும் ஆதரிக்கவில்லை

### ரணிலை வீட்டுக்கு அழைத்து உபசரித்த சாள்ஸ் தெரிவிப்பு

மன்னார், செப். 27
ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் விருப்பப்படி வாக்களிக்கவே நான் யாரையும் ஆதரித்திருக்கவில்லை என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.
அவர் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:-
நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனவாதம் அற்ற நாடாக இலங்கை மாறுவதற்கும் இலஞ்ச ஊழல் அற்ற நாடாக இலங்கையை கொண்டு வருவதற்கும் மற்றும் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர் நினைவில் வைத்து தனது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இதை நான் அவரிடம் கோரிக்கையாக முன்வைக்கிறேன். ஜனாதிபதித் தேர்தலின் போது நான் யாருக்காகவும், யார் சார்பாகவும் எந்த விடயங்களையும் கூறவில்லை. மக்கள் யாருக்கு விரும்பி வாக்களிக்கிறார்களோ அது மக்களின் விருப்பம் என்பது எனது கருத்தாக இருந்தது. கடந்த 2 வருடங்களாக ஜனாதிபதி ரணிலை விக்கிரமசிங்கவுடன் கதைத்து மன்னார் மாவட்டத்தில் இருந்த சில பிரச்சினைகளுக்குத்தீர்வைமுன்வைத்தேன். அண்மையில் அவர் மன்னாருக்கு வருகின்ற போது எனது வீட்டுக்கு வந்திருந்தார். மக்களின் பிரச்சினைகளை கலந்தாலோசிக்கும் வகையிலே அவரது வருகை அமைந்திருந்தது - என்றார். (ஓ-56)

## பொதுத் தேர்தலையும் அமைதியாக நடத்துவோம்

### பவ்ரல் தெரிவிப்பு

கொழும்பு, செப். 27
நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலைப் போன்று பொதுத் தேர்தலையும் அமைதியான முறையில் நடத்துவோம் என்று பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில்,
மற்ற ஆண்டுகளைப் போலன்றி, இந்த ஆண்டு, ஜனாதிபதித் தேர்தல் நாள்களிலும், தேர்தலுக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலங்களில் எந்தவொரு குற்றச் செயல்களும் பதிவாகவில்லை.
பொதுத் தேர்தலும் அவ்வாறே நடத்தப்படும்.
மாறுபட்ட அரசியல் கருத்தைக் கொண்ட புதிய ஜனாதிபதியின் கீழ் நடைபெறும் பொதுத்தேர்தல் என்பதால், அரச சொத்துகளைத் துஷ்பிரயோகம் செய்யாமல் பொதுத் தேர்தல் நடத்தப்படும் - என்றார். (ச)



## விலைபோனவர்கள் மீளிணைய முயற்சி

கொழும்பு, செப். 27
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பல்வேறு சலுகைகள் மற்றும் வாக்குறுதிகளின் அடிப்படையில் பெரமுனக் கட்சியிலிருந்து விலகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் பெரமுனவில் இணைந்துகொள்வதற்கு முயற்சிப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதற்கான இரகசியப் பேச்சுகள் இடம்பெற்று வருவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இந்தப் பேச்சுகளின்போது பொதுஜன பெரமுனக் கட்சி ஜனாதிபதித் தேர்தலின் போது தோல்வியடைந்ததன் காரணம் பற்றியும் வருகின்ற பொதுத் தேர்தலிலே வெற்றி பெறுவதற்குரிய ஆயத்தங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாகக் கூறப்படுகிறது. (சு)

## தேர்தலுக்கு முன்னர் பசில் வருவாராம்

கொழும்பு, செப். 27
நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதே எமது இலக்காக இருக்கின்றது. பசில் ராஜபக்ச நிச்சயம் நாட்டுக்கு வருவார் என்று பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பொதுத்தேர்தலுக்குத் தயாராகிவருகின்றோம். அதற்கு முன்னர் எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலை வெற்றிகொள்வதற்கு முயற்சிக்கின்றோம். புதியதொரு அரசியல் சக்தியை கட்டியெழுப்புவோம்.
கொள்கை ரீதியிலான முரண்பாடு காரணமாகவே ஐ.தே.க.வுடனான கூட்டு முறிந்தது. இனியும் கூட்டணிச் சாத்தியம் வராது என்றே கருதுகின்றேன். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெறுவதே எமது இலக்கு - என்றார். (ஓ-44)

## இந்திய மீனவர்களை விடுலை செய்யுங்கள்

### இந்திய காங்கிரஸ் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, செப். 27
இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யுமாறு காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதா ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.
அவர் தனது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:-
மயிலாடுதுறை மீனவர்கள் உட்பட 117 இந்திய மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 173 படகுகளும் இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பில் உள்ளன. அண்டை நாடுகளைச் சேர்ந்த மீனவர்களை இலங்கை கைது செய்வது போல் எந்த நாடும் கைது செய்வது, அபராதம் விதிப்பது, சேதப்படுத்துவது மற்றும் தாக்குவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை. இலங்கைத் தரப்பில் இது தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.
இப்போது உங்களது தலைமையில் நாடு இருப்பதால், உங்களுடைய தேசத்துக்கு ஒரு புதிய தொடக்கம், புதிய கண்ணோட்டம் மற்றும் செழிப்பு ஆகியவற்றை உருவாக்கப்போவதாக உறுதியளிக்கிறீர்கள், உங்களது இறையாண்மையுடைய ஜனாதிபதி அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மாகாணசபையிடமிருந்து

# தன்னிச்சையாகப் பெற்றுக்கொண்ட வாகனங்கள் ஒப்படைக்கப்படுமா?

**யாழ்ப்பாணம், செப். 27**

**வடக்கு மாகாண ஆளுநராக ஜீவன் தியாகராஜா இருந்த காலப் பகுதியில் வடக்கு மாகாண சபைக்குச் சொந்தமான மூன்று வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தால் பெறப்பட்டிருந்த நிலையில் அவை இனியாவது ஒப்படைக்கப்படுமா? என்று கேள்வி எழுப்பப் பட்டுள்ளது.**

இரண்டு வாகனங்கள் ஜனாதிபதிச் செயலகத்தின் பாவனைக்கும் ஒரு வாகனம் பொலிஸ் தலைமை யகத்துக்கும் வடக்கு மாகாணத்திடமிருந்து தன்னிச்சையாகப் பெறப்பட்டு வழங்கப்பட்டிருந்தன. இந்த வாகனங்கள் இன்னமும் வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைக்கப்படவில்லை.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி ஆட்சிப்பீடமேறியதும், முறையற்ற வகையில் வாகனங்களை வைத்திருந்த அரசியல்வாதிகள், அதிகாரிகள் அவற்றை மீளவும் ஒப்படைத்து வருகின்றனர். பெருந்தொகையான வாகனங்கள் ஜனாதிபதிச் செயலகத்தைச் சுற்றியுள்ள காலிமுகத்திடலில் விடப்பட்டுள்ளன. இந்த நிலையில் வடக்கு மாகாண சபையிடமிருந்து பெறப்பட்ட வாகனங்கள் மீள ஒப்படைக்கப்படுமா என்ற கேள்வி முன் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## தேர்தலால் பரீட்சைக்கு பாதிப்புகள் ஏற்படாது!

*ஆணையாளர் உறுதி*

கொழும்பு, செப். 27

நாடாளுமன்றத் தேர்தலால் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறி ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்குக் குறுகிய காலப்பகுதியே காணப்பட்டாலும் அதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகவுள்ளது - என்றார். (ஒ-இ)





கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட ஜயந்த லால் ரத்னசேகர திருகோணமலையின் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார். (ஒ-50)

## பொதுத் தேர்தல் பணிகள் ஆரம்பம்

கொழும்பு. செப்.27

பொதுத் தேர்தல் தொடர்பான முதற்கட்ட அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத் தலைவர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான போதுமான ஆவணங்கள் அரசாங்க அச்சகத்தில் உள்ளன என்றும், தேர்தல் பணிகள் தொடர்பான அரசிதழ்கள் போன்றவற்றை அச்சிடும் பணியை அச்சகம் ஆரம்பித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (எ-ரி)

## பொதுத் தேர்தலுக்கு ரூபா 11 மில்லியன்!

கொழும்பு. செப்.27

பொதுத் தேர்தலுக்கு 11 மில்லியன் ரூபா மதிப்பீடு திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

கடந்த முறை நாடாளுமன்றத் தேர்தல் செலவினங்களை வைத்து இந்தத் தொகை மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஆயினும், தற்போதைய நிலை எவ்வாறு காணப்படுகின்றது என்பது தொடர்பில் மேலும் கலந்துரையாட வேண்டும் என அவர் தெரிவித்தார். (எ-இ)



## மதுபானசாலை அனுமதி விவரங்களும் கைவசம்!

*தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு*

மத்தியவங்கி மோசடி, ஏப்ரல் 21 தாக்குதல் உள்ளிட்ட சம்பவங்கள் போன்று மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொண்டவர்களின் பட்டியலும் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

300 இலட்சம் ரூபா முதல் 400 இலட்சம் ரூபாவுக்கு மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை விற்பனை செய்தவர்கள் உள்ளனர். அவர்களின் விவரங்கள் எம்மிடம் உள்ளன. ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான விசாரணைகள் நடத்தப்படும்.

அத்துடன் அவ்வாறான சகல தரப்பினர் தொடர்பான விவரங்களும் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்படும் எனத் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

## தினம் தெரியுமோ?

அரசியலில நிரந்தர எதிரியுமில்லை, நிரந்தர நண்பனும் இல்லை எண்டு சொல்லுவினம். அதை பார்லிமெண்ட் எலக்சனில எங்கடை ஆக்கள் கண்ணாராக் கண்டு சந்தோசப்படப் போகினம். ஜனாதிபதித் தேர்தலில் ஒரே கன்னையில நிண்டவை வேற வேற கன்னையாப் பிரிஞ்சு அடிபடுறதையும், எதிரெதிரா நிண்டு ஆளுக்காள் சேத்தை வாரியடிச்சவை ஒண்டாக் கட்டிப்பிடிச்சு கூடிக் கூலாவுற கூத்துகளையும் இந்தப் பார்லிமெண்ட் எலக்சனில கட்டாயம் பார்க்கத்தான் போறியள். அதுக்கான பிள்ளையார் சுழியை ரெலிபோன் கட்சிக்காரர் போட்டிருக்கினமாம்.

போனமுறை கோத்தாவின்ர ஆட்சியில 'என்ர கனவு யாழ்' எண்டு திரிஞ்சு கடைசியா 'என்ர கனவு பார்' எண்டு ரூட்டை மாத்தின அமுல்பேபிதான் இந்தத் திருப்பணியை இனிதே தொடக்கி வைச்சிருக்கிறாராம். ஜனாதிபதித் தேர்தலிலையே அவர் முதல்ல சஜித்தின்ர சால்வையைப் பிடிச்சுக் கொண்டு தான் திரிஞ்சவர். ஆனால் பிறகு என்ன திடீரெண்டு ரணிலாரின்ர பக்கம் குத்துக்கரணம் அடிச்சு, அவருக்காக இரவு பகலாக் கடும் வேலை செய்தவர். எல்லாம் பார் லைசென்ஸ் செய்த மாயமெண்டு சனம் கதைச்சவை. அந்த விசுவாசத்தில சஜித்தின்ர பக்கம் நிண்ட சித்தப்பாவோட கூட சண்டைக்குப் போனவர். அமுல்பேயின்ர அப்பாவும், சித்தப்பாவும் ஒரு மைதானத்துக்காக பூட்டு போட்டு கொழுவுப்பட்ட சங்கதி ஊருக்கே தெரியும். அப்பிடி சஜித் கூட்டம் வைக்க மைதானத்தையே குடுக்கக்கூடாது எண்டு நரி வேலையெல்லாம் பார்த்தவர் அமுல்பேபி. இப்ப பார்லிமெண்ட் எலக்சனில் ரணிலோட இருந்தால் பிழைப்புக்காகாது எண்டிட்டு சஜித்தின்ர பக்கம் சாயிறதுக்காக ஓடித்திரியிறாராம். உடம்பில உயிர் இருந்தாத்தானே உண்ணியும் இருக்கும். இல்லாட்டி உண்ணி தன்ர பாட்டில கழண்டு போடும். அதைமாதிரி தன்ர மகனுக்கும் பார்லிமெண்ட் எலக்சனில யாழ்ப்பாணத்தில நிக்க சீற் தரச்சொல்லி, அமுல்பேபியின்ர அப்பாவும் இன்னொரு பக்கமா சஜித்துக்கு தூது அனுப்பியிருக்கிறார். அவை ரண்டு பேருக்கும் சீற் குடுக்கிறதுக்கு சஜித்தரப்பும் பச்சைக்கொடி காட்டிப் போட்டுது எண்டு கதை.

இந்தக் கதையை கேள்விப்பட்டதும் சஜித்துக்காக ஜனாதிபதித் தேர்தலில பாடுபட்டவை கடுமையாக் கொந்தளிக்கினம். 'நாங்கள் கஷ்டப்பட்டு வீடு வீடாப் போய் சஜித்துக்கு சப்போர்ட் எடுத்துக்குடுக்க, எங்களுக்கு எதிரா வேலை செய்தவருக்கு எங்கட கட்சியில சீற் குடுக்கினமெண்டால் பிறகேன் நாங்கள் கட்சியில இருக்கோணும். மேடையில எல்லாருக்கும் முன்னால எங்கட சஜித்தை கழுவி ஊத்தினவருக்காக நாங்கள் போய் வாக்குப் போடுங்கோ எண்டு கேட்டால் சனம் செருப்பால தான் அடிக்க வரும். அப்பிடி அவையின்ர காசுக்காக சீற் குடுத்தினம் எண்டால், சஜித்துக்கு இஞ்ச நூறு நூற்றைம்பது வாக்குக் கூட விழாது. நாங்களும் அவரை விட்டிட்டு போடுவம்' எண்டு சொல்லுகினம். எல்லாக் கட்சியும் எலக்சனோட பிரிஞ்சு சிதறுற மாதிரி ரெலிபோனுக்குள்ளையும் யாழ்ப்பாணத்தில குத்துவெட்டுக்கு பஞ்சம் இருக்காது போல.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குடிதண்ணீர் நிறுத்தம் பொதுமக்கள் பாதிப்பு!

முல்லைத்தீவு, செப்.27

முல்லைத்தீவில் இராணுவத்தால் வழங்கப்பட்டுவந்த குடிதண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கேப்பாபிலவு பாதுகாப்புப் படைப்பிரிவால் இலவசமாக வழங்கப்பட்டுவந்த குடிதண்ணீர் விநியோகமே நிறுத்தப்பட்டுள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (எ-45-19)

## யோகா பயிற்சி

யாழ்ப்பாணம், செப்.27

உலக சமாதான ஆலய அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ள இலவச யோகா பயிற்சி வகுப்பு யாழ். இணுவில் இந்துக் கல்லூரியில் நாளை சனிக்கிழமை மற்றும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நடைபெறவுள்ள வகுப்புகளில் ரீ.நதிபரன் மற்றும் கலாநிதி பா.சுதாகரன் ஆகியோர் யோகாக்கலை பற்றிய விளக்கங்களை வழங்கவுள்ளனர். பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்பவர்களுக்கு மூன்று மாதப் பயிற்சி நிறைவில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

பயிற்சிநெறியில் சிறியவர் முதல் பெரியவர் வரை இருபாலாரும் கலந்து கொள்ளலாம் எனவும், பயிற்சி வகுப்பில் கலந்து கொள்பவர்கள் 0779603001, 0760233301 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகத்துக்குக் குறைவில்லை. தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், சிலருக்குக் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். தாய்மாமன் வழியில் செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். வாழ்க்கைத்துணையால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். தாய்வழி உறவினர்கள் வகையில் சுபச் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும் என்றாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். வியாபாரம் வழக்கம்போலவே நடைபெறும்.

**கன்னி:** அதிகரிக்கும் செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும். குடும்பத்தில் மூன்றாவது நபர்களின் தலையீடை அனுமதிக்கவேண்டாம். தாய்மாமன் வழியில் சுபச்செய்தி வரும்.

**துலாம்:** இன்று நீங்கள் தொடங்கும் காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். சகோதர வகையில் மகிழ்ச்சியுடன் செலவும் உண்டாகும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**விருச்சிகம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**மகரம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவும். மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும்.

**கும்பம்:** நண்பர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். தந்தை வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சகோதர வகையில் எதிர்பாராத செலவு ஏற்படும்.

**மீனம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.



## வள நிலைய திறப்பு விழா

கிளிநொச்சி, செப்.27

கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் போர்ட் மற்றும் மடிக் கணினிகள், ஒலிபெருக்கி சாதனங்கள், கமராக்கள் என்பன வற்றை உள்ளடக்கிய பிரயோக வள நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி முதல்வர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் கடந்த 19 ஆம் திகதி கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அ.சிவனருள்ராஜா வள நிலையத்தைத் திறந்தார். ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் என்பனவற்றிலிருந்து வழங்கப்படும் பயிற்சிகளை இங்கிருந்து கற்பதற்கான வாய்ப்புகள் இந்த நிலையத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளது.

வள நிலையக் கட்டடம் கல்லூரியின் பழைய மாணவர்களான செல்லையா செந்தீபன், கந்தையா சுரேஸ்குமார் ஆகியோரின் ஆதரவில் மீள் ஒழுங்குபடுத்தப்பட்டு பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. (எ-22,13)

## 'பைரோஸ்மணி' ஞாயிறன்று திரையிடல்

யாழ்ப்பாணம், செப்.27

ஒரு ஓவியனின் வாழ்க்கையை எடுத்துக்காட்டுவதாக ஜோர்ஜி செங்கெலயாவால் நெறியாள்கை செய்யப்பட்ட 'பைரோஸ்மணி' எனும் ஆங்கிலத் திரைப்படம் யாழ். திரைப்படக்கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடன் யாழ்.தந்தை செல்வா கலையரங்கில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திரையிடப்படவுள்ளது.

இந்தத்திரைப்படம் லண்டன் திரைப்பட விழா, சிக்காக்கோ உலகத் திரைப்பட விழா ஆகியவற்றில் விருதுகளைப் பெற்றுள்ளது. பார்வையிடலுக்கான அனுமதி இலவசம் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-25)

## கஞ்சாவுடன் இருவர் கைது

கிளிநொச்சி, செப்.27

ஆனையிறவு சோதனைச்சாவடியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 4 கிலோ கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 18 மற்றும் 25 வயதான இளைஞர்கள் இருவர் பளைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ஒ-113)



## ஆங்கிலதினப் போட்டியில் முருகானந்தா சாதிப்பு

கிளிநொச்சி, செப்.27

கடந்த 20ஆம் திகதி வலய மட்ட ரீதியிலான ஆங்கில தினப் போட்டியில் கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி மாணவர்கள் 17 போட்டிகளில் வெற்றி பெற்று மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-22,13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அக்கறை அவசியம்

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் நாடாளு மன்ற ஆசன எண்ணிக்கை 7 இலிருந்து 6 ஆகக் குறைவடைந்துள்ளது. 2010ஆம் ஆண்டு வாக்காளர் மீளாய்வு இடம்பெறாமல் இருந்தபோது 9 ஆக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை, மீளாய்வின் பின்னர் குறைவடைந்தது. ஆனால் 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றபோது அது 7 ஆக அதிகரித்திருந்தது. 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலும் அந்த எண்ணிக்கை 7ஆகவே இருந்தது. தேர்தல் இடம்பெறாத 2012 ஆம் ஆண்டு மீளாய்வின்போது நாடாளுமன்ற ஆசன எண்ணிக்கை 6 ஆகக் குறைவடைந்திருந்தது. தேர்தல் நடைபெறாத ஆண்டாக இருந்தமையால் இந்தக் குறைப்பினால் எந்தப் பாதிப்பும் ஏற்பட்டிருக்கவில்லை. இம்முறை யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு தேர்தல் மாவட்டங்களில் தலா ஒவ்வொரு ஆசனங்கள் குறைவடைந்த அதேவேளை கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தலா ஒவ்வொரு ஆசனங்கள் அதிகரித்திருக்கின்றன. யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு தேர்தல் மாவட்டங்களின் வாக்காளர் எண்ணிக்கை அதிகரிப்பு வீதத்தைக்காட்டிலும் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களின் வாக்காளர் அதிகரிப்பு வீதம் அதிகமாகும். அதனால் அங்கு ஆசன அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஏனைய தேர்தல் மாவட்டங்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இருந்த நிலையைப் பேணுகின்றன. 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் வாக்குகள் சிதறுண்டிருந்தன. இம்முறை நிச்சயமாக அதைவிட மோசமாக வாக்குகள் சிதறப்போகின்றன. நாடாளுமன்ற ஆசனங்களும் குறைவடைந்த நிலையில் வாக்குச் சிதறல்கள், தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஆரோக்கியமானதாக இருக்கப் போவதில்லை.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் நாடாளு மன்ற ஆசன எண்ணிக்கை வீழ்ச்சிக்கு அரசியல் கட்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஆகக் கூடிய பொறுப்பு உண்டு. வாக்காளர் மீளாய்வு ஒவ்வொரு ஆண்டும் தேர்தல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகின்றது. வாக்காளர் மீளாய்வு கிராம அலுவலர்கள் ஊடாக முன்னெடுக்கப்படுவதற்கு முன்பதாக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள், வாக்காளர் மீளாய்வை கண்காணிப்பதற்கு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பிரதிநிதிகளை நியமிக்க முடியும். இது தொடர்பான அறிவுறுத்தல்கள் தேர்தல்கள் திணைக்களத்தால் வழங்கப்படுகின்றன. ஆனால் இலங்கையில் எந்தவொரு அரசியல் கட்சியும் வாக்காளர் மீளாய்வின்போது பிரதிநிதிகளை நியமிப்பது இல்லை. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் கட்சிகளும் தங்கள் பிரதிநிதிகளை நியமிப்பதில்லை. அவ்வாறு நியமித்திருந்தால், தமது ஊர்களிலுள்ள ஆதரவாளர்கள் அல்லது மக்களின் பெயர்கள் தேவையற்று நீக்கப்படுவதை அல்லது வாக்காளர்களாக பதிவு செய்யப்படாமல் விடுவதை தடுத்திருக்கமுடியும். வாக்காளர் மீளாய்வுக் காலங்களில் அவற்றை முன்னெடுக்காமல் விட்டுவிட்டு நாடாளுமன்ற ஆசனம் குறைவடைந்த பின்னர் 'குய்யோ முறையோ' எனக் கத்திக்கூப்பாடு போடுவதில் பலனில்லை.

இவற்றுக்கு மேலதிகமாக யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் பின்பற்றப்பட்டு வரும் குடும்ப அட்டைப் பதிவு நடைமுறையும், வாக்காளர் பதிவில் மக்கள் அசிரத்தையாக இருப்பதற்கு காரணம் என்று கூறப்படுகின்றது. குடும்ப அட்டைப் பதிவை மேற்கொண்டால் எல்லாப் பதிவுகளையும் செய்தமையைப்போன்று மக்கள் கருதுகின்றமையும், குடும்ப அட்டைப் பதிவே முக்கியம் என நினைக்கின்றமையும், வாக்காளர் பெயர்ப்பட்டியலில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யாமல் விடுவதற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது. இவை எல்லாம் சேர்ந்து யாழ்ப்பாணத்தின் நாடாளுமன்ற ஆசனங்களை மாத்திரமல்ல, பல்கலைக்கழக அனுமதி, மாவட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு என்பனவற்றிலும் தாக்கத்தைச் செலுத்தப்போகின்றன என்பதே உண்மை.




# பகிடிவதையைத் தடுக்க வழிகாட்டல் தொகுப்பு

## உயர் நீதிமன்றில் சட்டமா அதிபர் அறிவிப்பு

**கொழும்பு, செப். 27**

**அரச பல்கலைக் கழகங்களில் நிகழும் பகிடிவதை சம்பவங்களை தவிர்ப்பதற்கு வழிகாட்டுதல் தொகுப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.**

அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதை சம்பவங்களை ஒழிப்பதற்கான வழிகாட்டுதல்களைத் தயாரிப்பதற்கான உத்தரவு ஒன்றை வெளியிடுமாறு கோரி, 2020ஆம் ஆண்டு ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதைச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மாணவர் சமர்ப்பித்த அடிப்படை உரிமை மனுவொன்று, உயர் நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கலாநிதி அவந்தி பெரேரா, அரச பல்கலைக்கழகங்களில் நிகழும் பகிடிவதை சம்பவங்களைத் தடுப்பதற்காக வழிகாட்டுதல் தொகுப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றில் தெரிவித்துள்ளார். இறுதி வரைவை தயாரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் தலைமை நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ஒ-இ)

## பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறையலாம்

கொழும்பு, செப்.27

சந்தையில் முட்டையின் விலை குறைந்துள்ளதால் பேக்கரிப் பொருள்களின் விலையும் குறையவேண்டும் என பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை ஒன்றின் விலை, தற்போது 28 முதல் 35 ரூபாவரை உள்ள தாக அதன் தலைவர் துசித இந்திரஜித் உடுவர தெரிவித்துள்ளார். (எ-25)

## செப்ரெம்பர் மாதத்தில் சுற்றுலாவிகள் குறைவு

கொழும்பு, செப்.27

செப்ரெம்பர் மாதத்துக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை, எதிர்பார்த்ததை விடக் குறைவாகவே காணப்படுவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. விசா வழங்குவது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் இதற்கு காரணமாக இருக்கலாம் என அதன் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

39 நாடுகளின் பிரஜைகளுக்காக விசா இன்றி சுற்றுலாவை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திலிருந்து வழங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-25)

# புலமைப் பரிசில் வினாத்தாள் கசிவு: ம.உ. ஆணைக்குழுவும் விசாரணை

கொழும்பு, செப். 27

நடைபெற்று முடிந்த புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளில் இடம்பெற்ற கேள்விகளுக்கு இணையாக அனுமானங்களின் அடிப்படையிலான கேள்விகள் அடங்கிய வினாத்தாள் வெளியானமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் பிரதானிகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணை க்களம் மற்றும் கல்வி அமைச்சு என்பன ஏற்கனவே விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. (ஒ-இ)

**நாளை**

28.09.2024

சனிக்கிழமை - புரட்டாதி - 12

சுபநேரம் : 03.02- 04.32

ராகுகாலம் : 09.02 - 10.32

**நாளொரு நல்வார்த்தை**

**உயர்ந்த மனிதர் சொற்களில் பலவீனமாக இருந்தாலும் நடத்தையில் மிக உறுதியாக இருப்பர்.**

- கன்பூசியஸ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்தியா செல்லும்போது

# மீனவர் பிரச்சினை பற்றி ஜனாதிபதி பேசவேண்டும்

யாழ்ப்பாணம், செப். 27

**இந்தியா செல்லவுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, எல்லை தாண்டி அத்துமீறி உள்நுழையும் இந்திய மீனவர்கள் தொடர்பில் பேச வேண்டும் என யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்தார்.**

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எல்லைதாண்டும் இந்திய மீனவர்களால் வடபகுதி மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். கடந்த அரசாங்கத்தில் மீனவ சமூகம் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க இந்திய மீனவர்களின் அத்துமீறல் ஓரளவேனும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நிலையில் பலர் கைது செய்யப்பட்டனர். புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவி ஏற்றுள்ள நிலையில் எமது மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் இந்தியப் பிரதமருடன் பேச்சுகளை நடத்தி நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தர முயற்சிக்க வேண்டும். வட மாகாணத்தில் இடம்பெறும் உள்ளூர் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதோடு சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் - என்றார். (ஒ-20)

# தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு வேண்டும்

*புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வலியுறுத்து*

யாழ்ப்பாணம், செப். 27

நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு உரிய தீர்வுகளை முன்னெடுக்கும் அதேவேளை தீர்வு காணப்படாத தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய நியாயமான தீர்வு காணப்படவேண்டும் என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மக்கள் சார்புக் கொள்கைகளை முன்வைத்த தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்று அதன் தலைவர் அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ளார் இந்த வெற்றியின் அடிப்படையை நோக்கின் அரகலய மக்கள் எழுச்சியின் போராட்ட உணர்வலைகள் உழைக்கும் மக்களின் வாக்குகளாக மாற்றமடைந்திருப்பதைக் காண முடிகிறது.

இத்தகைய வாக்களிப்பானது பாரம்பரியமான மேட்டுக்குடி உயர் வர்க்கப் பரம்பரை ஆளும் வர்க்க சக்திகளை நிறைவேற்று அதிகார அரங்கிலிருந்து அப்புறப் படுத்தியிருக்கிறது.

எனவே ஜனாதிபதித் தேர்தலில் கட்டமைப்பு வாயிலான மாற்றங்களை எதிர்பார்த்து வாக்களித்த உழைக்கும் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறவேண்டும். அத்துடன் நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு வழிகோ லிய தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படவேண்டும் - என்றுள்ளது. (ச-ரி-66)

# யாழ். பல்கலைக்கழக பொன்விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டு நிகழ்வு உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு 'சுற்றுலாவும் அமைதியும்' எனும் தொனிப்பொருளில் இந்தியாவின் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்துடன் இணைந்து முதல் நாள் ஆரம்ப நிகழ்வுகள் உணவு மற்றும் கைப்பணிப்பொருள் சந்தை, கலாசாரத் திருவிழா, மாணவர்களின் உணவுச்சந்தை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை இடம்பெறவுள்ளன.

முதலாம் நாள் நிகழ்வு 'சுற்றுலாவும் அமைதியும்' என்ற தொனிப்பொருளில் ஆய்வரங்காக நடைபெறவுள்ளதோடு, ஆராத சுருதி உரையினை கொழும்புப் பல்கலைக்கழக சமூகவியல் பேராசிரியர் பிறேம குமார டி சில்வா, ஜெற்விங் சிம்போனி குழுமத்தின் தலைவர் கிரான் குரே ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகளாக இலங்கை மற்றும் இந்தியா பேராசிரியர்களால் வடமாகாண சுற்றுலா மற்றும் தொழிற்றுறை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தொழிற்றிறன் மேம்படுத்தல் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன. மூன்றாம் நாள் நிகழ்வுகளாக கலைநிகழ்வுகளும், பண்பாட்டு அமர்வுகளும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளுக்கு சமாந்தரமாக இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை மு.ப. 10 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை சிறிய நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் கண்காட்சிகளும் , சந்தையும் நடைபெறவுள்ளதோடு, இம் மூன்று நாட்களும் மாலை 6 தொடக்கம் இரவு 9 மணி வரை கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ச-45)

# விபத்தில் தம்பதியர் உயிரிழப்பு

*மாத்தறை, செப்.27*

*அக்குரஸ்ஸ பிரதேசத்தில் நடந்த விபத்தொன்றில் கணவனும், மனைவியும் உயிரிழந்துள்ளனர். மோட்டார் சைக்கிள் ஒன்று வானுடன் மோதியதில் இந்த விபத்து நடந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 38 வயதுடைய நபரும் அவரது 32 வயது மனைவியும் உயிரிழந்துள்ளனர். விபத்து தொடர்பில் வானின் சாரதி கைது செய்யப்பட்டதுடன், அக்குரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-ரி)*

**INVITATION FOR BID**
**PSDG - 2024**
**Manthai East Pradeshiya Sabha – Pandiyankulam**

1) The Chairman, Local Authority Procurement Committee on behalf of Manthai East Pradeshiya Sabha, Northern Province invites sealed bids from eligible and qualified Bidders for the works described in the table below.
2) Bidding will be conducted through National competitive bidding procedure. However, according to the public finance circular no 04/2016(ii) dated 2019.05.08 regional preference and CIDA grade preference shall apply.
3) To be eligible for contract award the successful bidders shall not have been black listed and shall have been registered in the field of Highway Construction for grade mentioned in the table below with the Institute for Construction Industry Development Authority (CIDA).
4) Qualification requirements are indicated in section 4 of the bidding document. Additional details are provided in the Section 5 of the bidding document.
5) Interested bidders may obtain further information from *Chairman, Procurement committeeManthai East Pradeshiyasabha.-Pandiyankulam (Te.No-021 228 3475, Fax No-021 228 3476)* and inspect the bidding documents at the address given below from any working days 9.00 hrs to 15.00 hrs from 2024.09.27 till 2024.10.09
6) A complete set of Bid Documents in English language may be purchased by interested Bidders on the submission of a written application to the *Manthai East Pradeshiyasabha.* From 2024.09.27 until 2024.10.09 from 09.00 hrs to 15.00 hrs. Upon payment of a non-refundable fee of Rs.2,000.00. The method of payment will be by cash.
7) Bids shall be delivered of Original and duplicate to the address *Secretary,Manthai East Pradeshiyasabha on* or before 14.00 hrs on 2024.10.10 Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend.

| S.No | Contract No | Description of Work | Source of Fund | Estimated Civil Cost (Million) | Contract Period | Required Grade | Required Bid Security | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Bid Validity Days | Bid Validity Period | Security amount | Security Validity Period |
| 01 | NP/14/44/ (02) /02/ PSDG/2024/02 | Renovation of Pandiyankulam 1st Road and 2nd Lane | PSDG | 2.00 | 63Days | C9 and C8 | 63Days | 2024.12.11 | 30,000.00 | 2025.01.08 |

Bid security is as following table
**Bid invitation table**

8 Pre bid meeting will be held on 2024.10.04 at 11.00 Hrs in Manthai East Pradeshiyasabha, Pandiyankulam. Interested bidders may attend the pre bid meeting at their own expenses.
9 The procurement committee has the power to reject the bid as totally or partly and to call retender

Chairman,
Local Authority Procurement Committee
Manthai East PradeshiyaSabha,Pandiyankulam
2024.09.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தியாகி திலீபனுக்கு நல்லூரில் அஞ்சலி!

யாழ்ப்பாணம், செப்.27

**ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த, தியாக தீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வடக்கு- கிழக்கிலும், புலம்பெயர் நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டன.**

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும், சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும், அவசரகாலச்சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்ற ஐந்து அம்சக் கோரிக்கைளை இந்தியாவிடம் முன்வைத்து திலீபன் தனது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தார். 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்த தியாகி திலீபன், நீராகாரமும் அருந்தாது அகிம்சை வழியில் தமிழ் மக்களுக்காகப் போராடினார். திலீபனின் கோரிக்கைகளை இந்திய அரசாங்கம் நிறைவேற்ற மறுத்த நிலையில், தனது கொள்கையில் உறுதியுடன் இருந்த திலீபன் செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி தனது உயிரை நீத்தார்.

யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபியில் நேற்றுக் காலை அவர் உயிர் நீத்த நேரமான 10.48 மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இரண்டு மாவீரர்களின் சகோதரியும், முன்னாள் போராளியுமான பெண்ணொருவர் பொதுச்சுடர் ஏற்றினார். அதன்பின்னர் தியாக தீபத்தின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக திலீபன் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்திய இடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

தியாகி திலீபனை நினைந்துருகி இரு தூக்குக்காவடிகள் நினைவிடத்துக்கு வந்திருந்ததுடன், பல இடங்களில் இருந்து தியாகி திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்திகளும் அங்கு வந்திருந்தன. (எ-20,27,26)



## வவுனியாவில் அஞ்சலி

வவுனியா, செப்.27

தியாகி திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் நேற்று வவுனியாவில் கடைப்பிடிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்போராட்டம் நடத்திவரும், வவுனியா வீதி அபிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள கொட்டகையில் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு மலர்தூவி, ஈகைசுடர் ஏற்றி அஞ்சலிக்கப்பட்டது. (எ-110)

## மார்பகப் புற்றுநோயால் இறப்பவர்கள் அதிகம்

கொழும்பு, செப். 27

உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் மார்பக புற்றுநோயால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சமூக சுகாதார மருத்துவ நிபுணர் ஹசரெலி பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் வருடாந்தம் 5 ஆயிரத்துக்கும் அதிகமான மார்பகப் புற்று நோயாளர்கள் பதிவாகுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

'உலக நாடுகளில் மார்பகப் புற்றுநோய் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் மார்பகப் புற்றுநோயால் இறப்பவர்களின் சதவீதம் அதிகரித்துள்ளது. முன்கூட்டியே நோயை கண்டறிதல் முக்கியம் என்று நாங்கள் கூற விரும்புகிறோம். ஒரு பெண்ணாக இருப்பது மார்பகப் புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கிறது.

தோல் நிறத்தில் மாற்றம், தோல் தடித்தல், முலைக்காம்புகளில் மாற்றங்கள் இது போன்ற ஒரு நிலை ஏற்பட்டால், நீங்கள் உடனடியாக ஒரு தகுதி வாய்ந்த மருத்துவரை அணுகவேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் விரைந்து செயற்பட்டு பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இ-இ



மன்னாரில் அஞ்சலி

தியாக தீபம் திலீபனின் 37ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று மன்னாரில் கடைப்பிடிக்கப்பட்டது. தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வில், தியாகி திலீபனின் உருவப்படத்துக்கு சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (எ-56)



## தியாக தீபம் திலீபனுக்கு கிளிநொச்சியில் அஞ்சலி

கிளிநொச்சி, செப்.27

தியாகி திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகமான அறிவாலயத்தில் நேற்று நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (எ-113)

## மாரி காலத்தை முன்னிட்டு டெங்கு ஒழிப்பு தீவிரம்

யாழ்ப்பாணம், செப்.27

யாழ். நகரில் இரண்டு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் விசேட டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து ஒரு வாரத்துக்கு நடைபெற்றன என்று யாழ். மாநகர சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். ஜே /73,74, 75, 76, 77, 78 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தற்போது மாரி காலம் ஆரம்பித்துள்ள நிலையில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த இருப்பதாகவும் பொது மக்கள் அதற்கான ஒத்துழைப்பை தர வேண்டும் என்றும் சுகாதாரபரிசோதகர்கள் கேட்டுள்ளனர். (எ-25,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை மாணவர்களுக்கு இந்தியாவால் நிதியுதவி

யாழ்ப்பாணம், செப். 27

இலங்கையின் வடக்கு - கிழக்கு பிராந்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களுக்கு இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் கல்விக்கான நிதியுதவித் திட்டத்தின் கீழ், யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் உதவித்தொகை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.




இந்திய அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களில் இருந்தும் சுமார் 100 மாணவர்கள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்துக்கான ரூபா 30 இலட்சம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகத்தின் துணைத்தூதுவர் சாய்முரளி இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உதவித் தொகைக்கான காசோலையைக் கையளித்தார். இந்தியத் தூதரகத்தின் கல்வி மற்றும் கலாசார விவகாரங்க ளுக்கான பிரதித்துணைத் தூதுவர் நாகராஜன் மற்றும் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், அதிகாரிகள், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், பயன்பெறும் மாணவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ள கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு வந்தாறுமூலையிலுள்ள கிழக்கு பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்தில் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

(ஒ-26)


## பொது அறிவித்தல்

### வலிகாமம் வடக்கு பிரதேச சபை 2025ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்திற்கான முன்மொழிவுகள் கோரல்

சபையின் 2025ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட முன் மொழிவுகள் வலிகாமம் வடக்கு பிரதேச பொதுஅமைப்புக்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கோரப் படுகின்றது. குறிப்பாக பெண்கள், இளையோர், விசேட தேவையுடையோர் மற்றும் பாதிக்கப்பட்ட குழுக்களிடம் இருந்து முன்மொழிவுகள் கருத்துக்கள் எதிர்பார்க்கப் படுகின்றது.

ஆர்வமுடையோர் எதிர்வரும் 2024 ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் வழிகளின் ஊடாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தபால் முகவரி : செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை- காங்கேசன்துறை
கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை.
மின்னஞ்சல் : vnpskks@yahoo.com
இணையத்தளம்: valikamamnorth.ps.gov.lk

Scan me!

சு.சுதர்ஜன்
செயலாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை

தொலைபேசி இல: 0212241130 27.09.2024

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
01 . 11 . 1934



உதிர்வு
20 . 09 . 2022

### அமரர் பொன்னம்பலம் கனகரத்தினம்

ஓய்வூதியர்-லக்சல

*(திதி: தசமி)*

தோள் தந்தீர்கள் வாழ்க்கை சுமையென, சிந்தை தந்தீர்கள் வாழ வழியென
எந்தையாய் எமக்கிருந்த நீங்கள் இன்று நிழலுருவில் எம் தந்தையாய் வழி காட்ட
உங்களோடு வாழ்ந்த காலம் பசுமையாய் எம் மனதில் இனித்திட
நினைவுகளின் சுகமான பொழுதில், நீங்கள் என்றும் எம்மோடு வாழ்கின்றீர்கள்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல 53, சங்கரப்பிள்ளை வீதி
மானிப்பாய்

(CS 1443) V-1

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## வட இலங்கைச் சங்கீத சபை

**பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோருதல்-2025**

வட இலங்கைச் சங்கீத சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான தரம் 1, 2, 3, 4, 5, 6 ஆகிய தரங்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் 01.10.2024 ஆம் திகதி முதல் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவம் அறிவுறுத்தல்களை வட இலங்கைச் சங்கீத சபையின் (www.ncomsjaffna.com) எனும் இணையத் தளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி - 31.10.2024**

(குறிப்பு: 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை எமது இணையத்தளத்தில் பார்வையிட முடியும்)

திருமதி ஜமுனா ராஜசீலன்
தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை
மருதனார்மடம்-சுன்னாகம்

## ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்-ஏழாலை

### மஹாசண்டி ஹோமம்

29.09.2024 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியிலிருந்து முற்பகல் 11.00 மணிவரை மஹாசண்டி ஹோமம் நடைபெறும்.

(CS 56288) V-1

தேவஸ்தானம்

## மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 09 . 1952



மறைவு
26 . 09 . 2024

### இராமுப்பிள்ளை பாலசிங்கம்

காரைநகர் பாலாவோடை களபூமியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் நேற்று (26.09.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், தம்பிப்பிள்ளை மற்றும் பாக்கியம், சிவக்கொழுந்து, கனகம்மா, சுந்தரம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவிச்சந்திரன் (கே.கே.கே களஞ்சியக் காப்பாளர்) மஞ்சுளா (இலண்டன்) காலஞ்சென்ற யாழினி மற்றும் நந்தினி (திருநெல்வேலி), நந்தகுமார் (முகாமையாளர் லக்சுமி றேட் சென்ரர்-சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நளாயினி (நல்லூர் பிரதேசசபை-ஆயுர்வேதம்) நந்தனகுமார் இலண்டன்), சிவஞானம் (ஞானா களஞ்சியம் - திருநெல்வேலி, லக்சுமி றேட் சென்ரர் சுன்னாகம்-உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தமிழினி, கதிரவன், மதுசன், கவிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் நடராசா, தர்மலிங்கம், தனபாக்கியம் இராசமலர், சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2024) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 345 9139
077 918 6397
077 119 8716

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(CS 56310) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதிய உரிமையை இழந்த 85 எம்.பி.க்கள்

கொழும்பு, செப்.27

**நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் சுமார் 85 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதிய உரிமையை இழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

நாடாளுமன்றத்தில் ஐந்தாண்டுகளை நிறைவு செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வாழ்நாள் முழுவதும் 45 ஆயிரம் ரூபாவை வாழ்நாள் ஓய்வூதியமாகப் பெறுவார்கள். ஆனால், ஐந்து ஆண்டு முடிவடைய முன்னர் நாடாளுமன்றம் தற்போது கலைக்கப்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த சிறப்புரிமையை இழப்பார்கள். கடந்த நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்துடன் முடிவடைய இருந்த நிலையில் தற்போது கலைக்கப்பட்டுள்ளதால், சுமார் 85 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதிய உரிமையை இழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# 15 அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள்

கொழும்பு, செப்.27

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தின் 15 அமைச்சுகளுக்கான செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை புதிய செயலாளர்களுக்கான நியமனங்கள் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டன.

அதன்படி பிரதமரின் செயலாளராக சபுநந்திரி, அமைச்சரவை செயலாளராக எம்.டி.ஜே. பெர்னாண்டோ, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளராக டி.எஸ்.ருவன் சந்திர, நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கைத் திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளராக கே.எம்.எம். சிறிவர்தன, வெளிவிவகார அமைச்சின் செயலாளராக அருணி விஜேவர்த்தன, கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக டி.ஜயசுந்தர, மகளிர் , சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக கே. மகேஷன், வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக எம். தய்முதீன், கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளராக எம்.பி. அதபத்து, சுகாதார அமைச்சின் செயலாளராக பாலித குணரத்ன மஹிபால,

நீதி, அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு மற்றும் தொழில் அமைச்சின் செயலாளராக பி.பி. யசரத்ன, சுற்றாடல், வனஜீவராசிகள், வள வனங்கள், நீர் வழங்கல், பெருந்தோட்டத்துறை மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளராக பிரபாத் சந்திரகீர்த்தி, கமத்தொழில், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் உயிர் பல்வகைமை வளங்கள் அமைச்சின் செயலாளராக எம். விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக சம்பத் துய்யகொன்ன, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஆர்.பி. செனவிரத்ன, புத்தசாசனம், மத விவகாரங்கள் மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு சமூக பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் செயலாளராக ரஞ்சித் ஆரியரத்ன, சக்தி வலு அமைச்சின் செயலாளராக உதயங்க ஹேமபால ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச)

# மூதாட்டி துஷ்பிரயோகம் 15 வருட கடூழியச் சிறை

கொழும்பு, செப்.26

69 வயதான மூதாட்டி ஒருவரை தவறான நடவடிக்கைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதை அடுத்து அவருக்கு 15 வருட கடூழியச் சிறைத்தண்டனையை காலி மேல் நீதிமன்ற நீதிபதி காவிந்த்யா நாணயக்கார வழங்கியுள்ளார்.

சிறைத்தண்டனை தவிர, குற்றவாளி, அபராதமாக 20 ஆயிரம் ரூபாவையும், பாதிக்கப்பட்டவருக்கு 50 ஆயிரம் ரூபாவையும் செலுத்தவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த அபராதங்களை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஆறு மாத சிறைத் தண்டனையும், ஓராண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ச)

# தேசிய மக்கள் சக்தியில் பெண்களுக்கு வகிபங்கு

கொழும்பு, செப்.27

நாடாளுமன்றத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களில் களமிறங்குவதற்குத் திட்டமிட்டுள்ள தேசிய மக்கள் சக்தி, வேட்பாளர்கள் பட்டியலில் பெண்களுக்கும் முக்கியத்துவம் வழங்கத் தீர்மானித்துள்ளது. வேட்பாளர்கள் பட்டியலில் பெண்களின் பெயர்களும் கட்டாயம் உள்ளடக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருவதற்குரிய அறிவித்தலை விடுப்பதற்கும் அந்தக் கட்சி தயாராகிவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறுவதற்கு பெண்களின் பங்களிப்பும் மகத்தானது என அந்தக் கட்சியினர் உறுதியாக நம்புகின்றனர். சமத்துவக் கொள்கை அடிப்படையில் பெண்ணொருவருக்குப் பிரதமர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பின்புலத்திலேயே பொதுத்தேர்தலிலும் அதிகளவு பெண் வேட்பாளர்கள் நிறுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

# ஊழல்வாதிகளை இணையோம்

*கூறுகிறது பெரமுன*

கொழும்பு, செப். 27

ஊழல்வாதிகளை தமது கட்சியில் இணைத்துக்கொள்வதில்லை சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தெரிவித்துள்ளது. பொதுத்தேர்தலுக்கு முகம் கொடுப்பது பற்றி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற கலந்துரையாடலிலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முடிவு செய்துள்ளது. கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களைத் திரும்பவும் கட்சியில் இணைத்துக் கொள்வது எனும் தீர்மானம் எடுக்கப்பட்டபோதே ஊழல்வாதிகளை தமது கட்சியில் இணைத்துக் கொள்வதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது. (ச-ரி-6)

# விளையாட்டு விழா

அளவெட்டி, செப்.27

அளவெட்டி தெற்கு வாணி முன்பள்ளியின் விளையாட்டுவிழா முன்பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி யோ.வஹிதா தலைமையில் வாணி முன்பள்ளி மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக பொது முகாமையாளர் யே. கேமவாசனும், சிறப்பு விருந்தினர்களாக உதவி பணிப்பாளர் க.விஷ்ணுராஜ், முன்பள்ளி இணைப்பாளர் உ.பிருந்தா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ரி-36)

# வதந்திகளை பரப்பாதீர்கள்

*வடக்கு முன்னாள் ஆளுநர் வேண்டுகோள்*

யாழ்ப்பாணம், செப்.27



சமூக ஊடகங்கள் மற்றும் இணையத் தளங்களில் பொறுப்புணர்வுடன் தகவல்களைப் பகிர வேண்டும். தகவல்களைப் பகிரும்போது உண்மைத்தன்மை அறிந்து வெளியிட வேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், ஆளுநர் பதவியிலிருந்து விலகியதை யடுத்து இணையத்தளங்களில் பல்வேறு வதந்திகள் பகிரப்படுகின்றன.

முன்னாள் ஆளுநர் ஒருவர் வெளிநாட்டுக்குச் செல்ல முயற்சித்து விமான நிலையத்திலிருந்து திருப்பி அனுப்பியதாகக் கூறப்படும் விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களின் தகவல்கள் தெளிவாகவும், உண்மையானதாகவும் பகிரப்படவேண்டும் - என்றுள்ளது. (ச-25-6)

# கலாசார நிகழ்வு

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலில் வவுனியா பிரதேசசெயலகமும், பிரதேசகலாசார பேரவையும் இணைந்து நடத்தும் பிரதேச கலாசாரவிழா நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இரண்டு பிரிவுகளாக இடம்பெறவுள்ள நிகழ்வில் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை அமரர் கிருஷ்ணபிள்ளை உதயகுமார் நினைவு அரங்கிலும், மாலை 2 மணி தொடக்கம் 5 30 மணிவரை சின்னப்பு சுபாஷ்சிங்கம் நினைவு அரங்கிலும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

காலை அரங்கு பிரதேசகலாசார பேரவையின் உப தலைவர் நாகலிங்கம் தியாகராஜா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதமவிருந்தினராக வரலாற்று ஆய்வாளர் அருணா செல்லத்துரை, சிறப்பு விருந்தினராக எழுத்தாளர் ராமசாமி சுப்பிரமணியம், தமிழ்மாமன்றத் தலைவர் மருத்துவர் செல்வராஜா மதுரகன், கௌரவ விருந்தினர்களாக விரிவுரையாளர் திருமதி கிருபாகரி யோகராஜா ஆகியோரும், மாலை அரங்கு வவுனியா பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான நாகலிங்கம் கமலதாசன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்மணி அகளங்கன், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை உதவிக்கல்வி பணிப்பாளர் திருமதி வேல்விழி சூரியகுமார், விருந்தினராக நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி அதிபர் திருமதி சூரியயாழினி வீரசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு தரப்பினருக்கு எதிராகவும் அணுவாயுதத்தைப் பயன்படுத்துவோம்

## புடின் எச்சரிக்கை

**மொஸ்கோ, செப். 28**

**உக்ரைனைப் பயன்படுத்தி ரஷ்யா மீது தீவிர தாக்குதல் நடத்தப்பட்டால், எந்தவொரு தரப்புக்கும் எதிராக அணுவாயுதங்களைப் பயன்படுத்துவோம் என்று ரஷ்ய அதிபர் புடின் எச்சரித்துள்ளார்.**



உக்ரைனுக்கு வழங்கப்படவுள்ள இராணுவ உதவிகள் தொடர்பில் அமெரிக்காவும் பிரிட்டனும் தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில், உக்ரைனுக்கான இராணுவ உதவிகள் தொடர்பில் அமெரிக்கா புதியதொரு நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது. இதன்மூலம் ரஷ்யாவை விரைவில் அமைதிப் பேச்சுக்கு வரவைக்க முடியும் என்று ஷெலன்ஸ்கி தெரிவித்திருந்தார்.

ஷெலன்ஸ்கியின் கருத்துக்கள் ரஷ்யாவுக்கு எதிரான ஆயுத விநியோகத்தை அமெரிக்கா அதிகரிக்கவுள்ளதா? என்ற கேள்விகள் எழுவதற்குக் காரணமாகியிருந்த நிலையிலேயே, 'உக்ரைனைப் பயன்படுத்தி ரஷ்யா மீது தீவிர தாக்குதல் நடத்தப்பட்டால், எந்தவொரு தரப்புக்கும் எதிராக அணுவாயுதங்களைப் பயன்படுத்துவோம்' என்று ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.

'அணு ஆயுதமற்ற ஒரு நாடான உக்ரைன், அணுஆயுத நாடுகளோடு சேர்ந்து ரஷ்யாவுக்கு எதிராக தீவிர ஆக்கிரமிப்பு முயற்சிகளை மேற்கொள்ளுமானால், இதனை ரஷ்யாவுக்கு எதிரான அணுஆயுத நாடுகளின் தாக்குதலாகவே ரஷ்யா கருதும். அத்தகைய ஒரு சூழல் ஏற்படுமானால், அணுஆயுதங்களைப் பயன்படுத்துவதில் ரஷ்யா பின்பற்றி வரும் கொள்கைகள் மாற்றத்துக்கு உள்ளாகும். இதில் எந்த சந்தேகமும் இல்லை' என்று புடின் மேலும் கூறியுள்ளார். (ம)

*இஸ்ரேல், ஹிஸ்புல்லாவை*

## போர் நிறுத்தத்துக்கு வருமாறு அழைப்பு!

டெல்அவிவ், செப். 28

குறைந்தது 21 நாள்கள் போர் நிறுத்தத்துக்கு முன்வரவேண்டும் என்று இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் சர்வதேசம் அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த ஒரு வாரமாக இஸ்ரேலும் ஹிஸ்புல்லாவும் பரஸ்பரம் வான் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. தற்போது அங்கு தரை வழியான இராணுவ நடவடிக்கைக்கும் இஸ்ரேல் தயாராகியுள்ளது. இதையடுத்தே, லெபனானில் இடம்பெற்றுவரும் மோதல்கள் முடிவுக்கு வரவேண்டும் என்றும், இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையே குறைந்தது 21 நாள்களாவது போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட தரப்புகள் அழைப்பு விடுத்துள்ளன.

இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையிலான போரானது பரந்த பிராந்திய விரிவாக்கத்தின் ஏற்றுக்கொள்ள முடியாத ஆபத்தை ஏற்படுத்துவதாக நட்பு நாடுகள் தெரிவித்துள்ளன. ஆனால் போர் நிறுத்தத்துக்கு வருவதற்கு இஸ்ரேலியப் பிரதமர் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

ஹிஸ்புல்லாக்களை முற்றாகத் தோற்கடித்து, இஸ்ரேலியர்கள் அமைதியாக வாழக்கூடிய நிலையை ஏற்படுத்துவதே தனது நோக்கம் என்று நேதன்யாகு மேலும் கூறியுள்ளார். (ம)

## 60முதிரை குற்றிகளுடன் வாகன சாரதி கைது

கிளிநொச்சி, செப்.27

தர்மபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தர்மபுரப் பகுதியில் சூட்சுமமான முறையில் கப்ரகவாகனத்தில் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட பெறுமதிமிக்க 60 முதிரை குற்றிகளுடன் வாகன சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட வாகன சாரதியையும், முதிரைக்குற்றிகள் கொண்டு செல்வதற்கு பயன்படுத்திய கப் ரக வாகனம் மற்றும் சந்தேக நபரையும் இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தர்மபுர பொலிஸ் நிலையப் பொறுப்பு அதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (ரி-113)

## டைனோசர் மண்டையோடு கனடாவில் நேற்று மீட்பு!

ஒட்டாவா, செப். 28

அல்பர்ட்டாவில் சுமார் 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த டைனோசர் ஒன்றின் மண்டையோடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராண்ட் பியரெரே பகுதியில் இந்த மண்டையோடு மீட்கப்பட்டுள்ளது என்றும், அதன் எடை சுமார் 270 கிலோவுக்கும் அதிகமாக இருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த வகை டைனோசர்கள் தவார உண்ணிகளாகவே இருந்திருக்கும் என்றும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

சம்பவ இடத்தில் தொல்பொருள் ஆய்வாளர்களும், தடயவியல் ஆய்வாளர்களும் ஒன்றுகூடி மேலதிக ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். டைனோசரின் மண்டையோட்டின் மீதான பகுப்பாய்வுகளும் இடம்பெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## விபத்தில் ஒருவர் பரிதாபமாகப் பலி

யாழ்ப்பாணம், செப். 28

விபத்தில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஹரிபிரசாத் (வயது-26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மோட்டார்சைக்கிள் மதிலுடன் மோதியதையடுத்து காயமடைந்த அவர் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

## முதித பீரிஸ் பதவி விலகல்



கொழும்பு, செப். 27

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ஆம் திகதி முதித பீரிஸ் லிட்ரோ நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். அதற்கு முன், அவர் அரசாங்கத்துக்கு சொந்தமான எல்.பி எரிவாயு விநியோக நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளராக பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-இ)



வனஜீவராசிகள் திணைக்களத்தின் நிதிப் பங்களிப்புடன் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தினால் நெடுந்தீவுப் பிரதேசத்தில் குதிரைகளுக்கு நீர் வழங்கும் செயற்றிட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரங்குகளை விரட்ட துப்பாக்கி வழங்கல்

சாவகச்சேரி, செப். 27

தென்மராட்சிப் பிரதேசத்தில் குரங்குகளால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. பிரதேச செயலகத்தில் 50 விவசாயிகளுக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை துப்பாக்கிகள் வழங்கப்பட்டன. (ச-25-9)

### தியாகதீபம்...

அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து காலை 7.30 மணியளவில் தியாகதீபம் திலீபனின் நினைவுகளைச் சுமந்த ஊர்திகள் சகிதம் நடைபவனி ஆரம்பமானது.

நடைபவனி உரும்பிராயைச் சென்றடைந்ததைத் தொடர்ந்து ஈழத் தமிழின விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியும், முதற் தற்கொடையாளருமான தியாகி பொன்.சிவகுமாரனின் உருவச் சிலையடியில் மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து கோண்டாவில், திருநெல்வேலிச் சந்தி, கல்வியங்காட்டுச் சந்தி ஊடாக ஊர்திகள் சகிதம் நடைபவனி நல்லூர் தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியைச் சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்த நேரமான முற்பகல் 10.48 மணியளவில் திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் வடக்கு வீதியில் மாவீரர் கதிர்மதியின் தந்தையான துரைராசா சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார். சமநேரத்தில் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் இரண்டு மாவீரர்களின் சகோதரியும், முன்னாள் போராளியுமான மலர்விழி பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலித்தார். அதனைத் தொடர்ந்து இரண்டு நிமிடங்கள் அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டுத் தொடர்ந்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை முன்னிட்டு வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 22 வயதான இளைஞரொருவர் திலீபன் பிறந்த இடமான ஊரெழுவிலிருந்தும், கைதடிப் பகுதியைச் சேர்ந்த 40 வயதான குடும்பஸ்தரொருவர் கைதடியிலிருந்தும் நல்லூரிலுள்ள திலீபனின் நினைவுத் தூபியடியை நோக்கிப் பறவைக் காவடிகள் எடுத்து வந்து தமிழ்மக்களின் விடுதலைக்காகக் கொண்ட கொள்கையில் இறுதிவரை உறுதியாக விருந்து தம் இன்னுயிரை ஆகுதியாக்கிய திலீபனைக் கடவுளாகத் தம் உள்ளங்களில் வரித்து உயர்ந்த மரியாதையைச் செலுத்தினர்.

முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், தமிழ்த்தேசிய அரசியல் வாதிகள், தமிழ்த்தேசியப் பற்றாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பல நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டு தியாகதீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர். (அ-ம-66)

### நாடாளுமன்றத்...

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தல் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் கூட்டணி அமைப்பதா அல்லது தனித்துக் களமிறங்குவதா என்பது தொடர்பான பேச்சுகளில் கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் 'சங்கு' சின்னத்தில் தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்கிய தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் அரசியல் கட்சியினர் நேற்றுமுன்தினம் ஒன்றுகூடிக் கலந்துரையாடியிருந்தனர். இதன்போது கூட்டணியாகவே தேர்தலை எதிர்கொள்வதாக முடிவெடுக்கப்பட்டது. அத்துடன், பொதுக் கட்டமைப்பில் உள்ள பொதுச்சபைகளுடனும் (சிவில்) இது தொடர்பில் பேச்சுகளை நடத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாகவே, பொதுக்கட்டமைப்பைச் சேர்ந்த பொதுச்சபைகளும், அரசியல் கட்சிகளும் நேற்றுக் கலந்துரையாடல்களை நடத்தினார்கள். இதன்போது, பொதுச்சபையின் பிரதிநிதிகளுக்கும் இடங்களை வழங்கி பொதுக்கட்டமைப்பின் 'அரசியல்கட்சிகளின் அணியாக' அல்லாமல் ஒட்டுமொத்தப் பொதுக் கட்டமைப்பாகத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டது.

எனினும், பொதுக்கட்டமைப்பின் பொதுச்சபையினர் இது தொடர்பான தமது முடிவை உடனடியாக அறிவிக்கவில்லை. இறுதி முடிவை அறிவிப்பதற்கு அவர்கள் அவகாசம் கோரியுள்ளனர். விரைவில் இது தொடர்பில் மீண்டும் பேச்சுகளை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

### தினேஷ்...

பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ரணிலுடனும் அவர்கள் இது தொடர்பில் பேச்சு களில் ஈடுபட்டுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் மீண்டும் இணைவதற்குரிய சாத்தியம் காணப்படுவதால் பெரமுனவின் ரணில் ஆதரவு அணியும், சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான அணியும் இணைந்து கூட்டணி அமைக்கவுள்ளனர். ஏனைய சில தரப்பினரையும் இதற்குள் உள்வாங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த ஈ.பி.டி.பி., தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, தேசிய காங்கிரஸ் என்பன கடந்த பொதுத்தேர்தலை போன்று இம்முறையும் தனித்து சொந்தச் சின்னத்தில் எதிர்கொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-44)

### வயோதிபர்...

சேர்ந்த கிருஷ்ணபிள்ளை கனகரட்ணம் (வயது-79) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். கடந்த 20 வருடங்களாக தனிமையில் வசித்துவந்த முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியதால், இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் உரிய சட்ட நடைமுறைகளுக்கு அமைய சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைத்தனர். (அ-ம-100)

### போதுமான...

ஜனாதிபதி அடுத்த வருடத்துக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக் கொள்வதில் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். இந்தச் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி என்ற வகையில் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் கடனுதவிகளின் அடிப்படையில் செயற்படுத்தப்படும் திட்டங்களைத் துரிதப்படுத்துவதன் அவசியத்தை தெளிவுபடுத்திய ஜனாதிபதி வெளிநாட்டு உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டங்களுக்கு மூன்று மாதங்களுக்குள் ஒப்புதல் வழங்க ஒரு குழுவை நியமிக்க திட்டமிட்டுள்ளதாகவும் இதன்போது தெரிவித்துள்ளார். (அ-ம)

### குடும்பத்...

45 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற மன்னார் திடீர் மரண விசாரணை அதிகாரி பா.பிரபாநந்தன் சடலத்தை பார்வையிட்டதோடு, சடலத்தை மீட்டு மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-56)

### மீனவர்களுக்கு...

படையில் இந்த மானியம் வழங்கப்படவுள்ளது என்றும் மீனவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக மானியம் செலுத்தப்படும் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

### பிணை...

விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராக சாவகச்சேரிபொலிஸாரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டு, நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டார். நேற்று இந்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சட்ட மருத்துவ அதிகாரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் சமர்ப்பிக்காமை, பிணையின் நிபந்தனைகளை மீறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் அவர்மீது நேற்று முன்வைக்கப்பட்டன. இதையடுத்தே, அவருக்கு முன்னதாக வழக்கப்பட்டிருந்த பிணை உத்தரவு ரத்துச் செய்யப்பட்டு அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (அ-ம-26)

### ஐ.தே.க.வுடன்...

ஐக்கிய தேசியக் கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் ஓரணியில் இணைப்பதற்கு கடந்த சில நாள்களாகத் தொடர்ச்சியான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாகவே கூட்டணியின் பிரதமர் வேட்பாளராகவும், கூட்டணியின் தலைவராகவும் சஜித் பிரேமதாஸவே இருப்பார் என்ற நிபந்தனை உட்பட பல்வேறு நிபந்தனைகளுடன் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதற்கு சஜித் தரப்புத் தயாராகியுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-ம-44)

### கல்லுண்டாய்...

கல்லுண்டாய் பகுதியில் தற்போது ஏராளமான மக்கள் வசித்து வருவதால், அங்கு கொட்டப்படும் குப்பைகளுக்குத் தீமூட்ட முடியாது என்ற உத்தரவு நடைமுறையில் உள்ள நிலையிலும், அவ்வப்போது இவ்வாறான தீ விபத்துகள் இடம்பெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாகவே தற்போதும் இந்தத் தீவிபத்து ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. (அ-ம-125)

### பெற்றோலியக்...

மூன்று நிறுவனங்களின் தலைவர் பதவிகளில் இருந்து அவர் ராஜினாமா செய்துள்ளார்.

புதிய அமைச்சர் விருப்பமான குழுவை நியமிப்பதற்கு சுதந்திரம் வழங்குவதற்காக அவர் தனது பதவிகளை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். (அ-ம-இ)

### வடக்கில்...

புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா மேலும் தெரிவித்ததாவது:-

வெப்பச் சலனச் செயற்பாடு காரணமாக, இன்று (நேற்று) வியாழக்கிழமை முதல் அடுத்த மாதம் 6ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாலை மற்றும் இரவுவேளைகளில் மழை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது - என்றுள்ளது. (அ-ம-66)

### முன்னைய...

சமீபத்திய பிரச்சினைகளுக்கு முன்னைய முறைப்படி விசா வழங்குவதே முதற்கட்ட நகர்வாக இருக்கும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் விஜித ஹேரத், அந்தத் திட்டத்தை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவருமாறு நேற்று இரவு உத்தரவிட்டார். (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், செப்.27
சைகைமொழிப் பயிற்சி மற்றும் உளவியல் பாடநெறியைப் பூர்த்தி செய்த யாழ். பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் தலைமையில் யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன், வளவாளர் கலாநிதி நா.விஜிதா, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ரி-27)



தியாகதீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தலின் 11ஆவது நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மூத்த போராளி பொன் மாஸ்டர் தலைமையில் கடைப்பிடிக்கப்பட்டது. (ச-66)



திருகோணமலை பெரியகடை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயக் கட்டுமானப் பணிக்காக சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் ஒரு இலட்சம் ரூபா நிதி ஆலய பரிபாலனசபையிடம் நன்கொடையாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டது. (ரி-66)

## ஞானச்சுடர் சஞ்சிகையின் செப்ரெம்பர் மலர் இன்று!

யாழ்ப்பாணம், செப். 27
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் 321ஆவது மாத இதழ் வெளியீட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்

# கோரிக்கைகளை மறுத்தால் மீண்டும் போராட்டம் வெடிக்கும்

### ஜோசப் ஸ்ராலின் எச்சரிக்கை

கொழும்பு, செப். 27
தற்போதைய அரசை ஆட்சிக்குக் கொண்டுவர வாக்களித்த ஆசிரியர்களின் கோரிக்கைகளை அரசாங்கம் செவிசாய்க்கவில்லை என்றால், அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக மீண்டும் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நாள் வெகு தொலைவில் இல்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
புதிய அரசாங்கம் இதுவரை அமைச்சுகளை நிர்வகிப்பதற்கு செயலர்களை நியமித்துள்ளது. இந்த செயலர்களை நியமிப்பதில் நாங்கள் திருப்தியடையவில்லை. பொது நிர்வாக பிரதம செயலர் மீது குற்றச்சாட்டுகள் உள்ளன. அவர் இருந்தபோது அவர் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான தணிக்கை அறிக்கைகள் கூட உள்ளன. மேல்மாகாண பிரதம செயலர் ஒருவர் அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளமை எமக்கு பிரச்சினையாகும். தற்போது கல்வித் துறையில் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதில் கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேலும், கல்வித் துறையில், பல பெரிய பிரச்சினைகள் உள்ளன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தவிர, மீதமுள்ள மூன்றில் இரண்டு பங்கு ஆசிரியர் ஊதிய இடைவெளியை வழங்குவதுதான் முக்கியமான பிரச்சினை.

அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டியது ஆட்சிக்கு வந்த அரசின் பொறுப்பு. தற்போதைய அரசாங்கம் நியமிக்கப்பட்டு சில நாட்கள் ஆகலாம். ஆனால் நவம்பரில் இன்னொரு பொதுத்தேர்தல் உள்ளது. அப்போது, தேர்தலுக்குப் பிறகு வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என்று சொல்வார்கள். நாம் வாயை மூடிக்கொண்டு இருக்கமுடியாது. எமது பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பு அநுரகுமார அரசாங்கத்துக்கும் உள்ளது. நாடு நிலையானதாக மாறும்போது, நமது பிரச்சினைகளுக்கு இணையாக தீர்வு காணப்பட வேண்டும். இல்லையெனில், அது நடக்கும் வரை நாங்கள் காத்திருக்கமுடியாது. அவர்கள் தங்கள் திட்டத்தை எவ்வாறு செயற்படுத்துகிறார்கள் என்று பார்ப்போம். நாங்கள் அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். எங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காவிட்டால் மீண்டும் வீதிக்கு வருவோம்- என்றார். (ஒ-இ)



## பேருந்து மோதி முதியவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், செப்.27
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி பாலத்தடியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காரைநகருக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பேருந்தும், தனியார் பேருந்தும் போட்டி போட்டுக் கொண்டு பயணித்தபோது, மோட்டார் சைக்கிளில் சென்ற முதியவர் மீது இ.போ.ச. பேருந்து மோதியது என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-25,27)

## விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சிநெறி மாவட்ட அலுவலக கணணி பயிற்சி நிலையத்தில் கற்கைநெறி நடைபெறும். விண்ணப்பதாரி 1625 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். கா.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைசித்தியுடன் கணிதம் ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் கா.பொ.த உயர்தரத்தில் 2 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தே.அ.அ. இலக்கம்,கல்வித் தகமைகள் மற்றும் தொலைபெசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்ட சுயமாக தயாரித்த விண்ணப்பப்படிவத்தை அடுத்த மாதம் 25 ஆம் திகதிக்க முன்னர் மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுனர் கைத்தொழில்பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல 44, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சபை முகாமையாளர் கேட்டுள்ளார். மேலதிக தகவல்களுக்கு 021 2222383 அல்லது 071 4553772 எனும் தொலைபெசி இலங்கங்களுடன் தொடர்புகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.